DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.67/2023**

**prosecution witness: Pw - 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாகராசன் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**04.08.2023**

முதல் விசாரணை:-

**நான் மண்டபம் கேம்பில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் இந்த வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.அது அ.சா.ஆ.**1 **ஆகும். வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.**

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

1) **போலீசார் விசாரணையில் கடந்த** 19.04.2022 **ல்** 15.00 **மணிக்கு நானும் எனது நண்பர்களான கார்த்திகேயன் முத்துப்பாண்டி, ஆஜர் எதிரி ஆகியோர் சேர்ந்து சுடுகாடு டாஸ்மார்க் மதுக்கடையில் மது குடித்துகொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது மது வாங்க செலவு செய்த கார்த்திகேயன் வைத்திருந்த பணத்தில்** 2000 **த்தை காணவில்லை என்றால் சரியல்ல. அப்போது நான், ஆஜர் எதிரியிடம் பணத்தை எடுத்ததாக முத்துப்பாண்டியிடம் சொல்லியதாக சொன்னேன் என்றால் சரியல்ல.**

2) அப்போது  எதிரியிடம் பணத்தை எடுத்தியா என்று கேட்டதற்கு வாக்குவாதம் ஏற்பட்டு ஆஜர் எதிரி என்னை கெட்டவார்த்தையால் பேசி கையில் வைத்திருந்த மதுப்பாட்டிலால் ஓங்கி அடித்து வலது கண்புருவத்தில் ரத்தக்காயம் ஏற்படுத்தியதாக புகார் வாக்குமூலத்திலும் போலீசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.